**குழித்துறை நகர்மன்றத்தின் 29-09-2023 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சியில் அடிப்படை தேவையான தட்டச்சர் பணியிடம் காலியாக இருப்பதால் அவசர அவசிய பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது அனுமதிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் தற்காலிகமாக ஊதியம் வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.646 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G10-ஐ குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த திருT.L.. ஜோஸ் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திருT.L.. ஜோஸ் | 2018-2019 | G10 | 69804 | Vol.VI Page No.39 |

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்**.2574/2020/**அ**2.

மன்றத்தீர்மான எண்.647 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

கோவிட் பெருந்தொற்று காரணமாக ஊரடங்கு முதல் மற்றும் இரண்டாவது அலையில் வருடாந்திர குத்தகை இனங்கள் செயல்படாத காலத்திற்கான 5 மாதங்களுக்கு குத்தகை தொகை விலக்களித்து வரப்பெற்ற அரசாணை எண்.337 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்**.3066/2021/**அ**2.

மன்றத்தீர்மான எண்.648 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

அரசாணை எண்.337, நாள் 16-06-2023-ன்படி கோவிட் முதல் மற்றும் இரண்டாவது அலையின் போது செயல்படாத காலத்திற்கான குத்தகை தொகையினை 5 மாதங்களுக்கு தள்ளுபடி செய்திட தெரிவிக்கப்பட்டதின் பேரில் கீழ்கண்ட இனங்களுக்கு தொகை ஈடு செய்யப்பட வேண்டிய விவரம் பின்வருமாறு.

1. காய்கறி சந்தை நுழைவு கட்டணம் வசூல் உரிமம்

| | <u>2020-2021</u> | |
|---|---|---|
| | மாதகுத்தகை தொகை | மூன்று மாத தொகை |
| திரு. கிறிஸ்துராஜ் | ரூ.4,05,607 | ரூ.12,16,821 |
| | <u>2021-2022</u> | |
| | மாதகுத்தகை தொகை | இரண்டு மாத தொகை |
| | ரூ.4,25,887 | ரூ.8,51,774 |

2. வாழைத்தார் உறைகுழி

| | <u>2020-2021</u> | |
|---|---|---|
| | மாதகுத்தகை தொகை | மூன்று மாத தொகை |
| திரு. கிறிஸ்துராஜ் | ரூ.44,713 | ரூ.1,34,139 |
| | <u>2021-2022</u> | |
| | மாதகுத்தகை தொகை | இரண்டு மாத தொகை |
| | ரூ.46,948 | ரூ.93,896 |

3. வி.எல்.சி. கலையரங்கம்

| | <u>2020-2021</u> | |
|---|---|---|
| | மாதகுத்தகை தொகை | மூன்று மாத தொகை |
| திரு. கிறிஸ்துராஜ் | ரூ.78,750 | ரூ.2,36,250 |

மேற்படி வருடாந்திர குத்தகை இனங்களுக்கான குத்தகை தொகை நிலுவையின்றி செலுத்தியுள்ளமையால் 2023-2024 நடப்பாண்டில் அன்னாருடைய குத்தகை இனங்களுக்கான குத்தகை தொகையில் மேற்கண்ட தொகையினை ஈடு செய்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3066/2021/**அ**2.

மன்றத்தீர்மான எண்.649 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சியில் கருங்கல் சாலையில் உள்ள தினசரி சந்தையை இடித்து புதியதாக ஒருங்கிணைந்த தினசரி சந்தை வளாகம் ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 29-09-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. பழைய தினசரி சந்தையில் உள்ள குத்தகைதாரர்களுக்கு மாற்று இடம் தர வேண்டியுள்ளதால் அருகில் உள்ள லாரிபேட்டையில் தற்காலிக சந்தை (Temporary Market shed) அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.19.80 இலட்சம் ஆகும் (பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்**.2589/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.650 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சியில் கருங்கல் சாலையில் உள்ள தினசரி சந்தையை இடித்து புதியதாக ஒருங்கிணைந்த தினசரி சந்தை வளாகம் ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 29-09-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. எனவே தினசரி சந்தையில் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் இனங்களான காய்கறி சந்தை நுழைவு கட்டணம், வாழைத்தார் உறையிடுதல், ஆடு அடிக்கும் கூடம், கட்டண கழிப்பிடம், காய்கறி சந்தைக்குள் செயல்படும் கடைகள் மற்றும் கருங்கல் சாலை கடைகள் ஆகியவற்றிற்கான உரிமங்களை கட்டுமான பணிகள் துவங்கும் காலத்திலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்**.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண்.651 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கிராம புல எண்.A5/1, A6/143-ல் அரசு சாலை புறம் போக்கு நிலத்தில் விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளிக்கு அருகில் மின்கம்பங்களில் சாய்ந்தவாறு ஆபத்தமான நிலையில் நிற்கும் 4 இலவ மரங்களை அப்புறப்படுத்திட 13-09-2023 ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ். பாபு,<br>கண்ணக்கோடு, மார்த்தாண்டம் | ஒப்பந்தப்புள்ளி தொகை<br>ரூ.45000/- |
| 2. | திரு. தேவதாஸ்,<br>குறுமத்தூர், குழித்துறை | ஒப்பந்தப்புள்ளி தொகை<br>ரூ.48000/- |

3. திரு.வி.எஸ். ஸ்ரீகுமார் ஒப்பந்தப்புள்ளி தொகை
இளஞ்சிறை ரூ.46000/-

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய திரு.எஸ. பாபு என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அவசர மற்றும் ஆபத்தான நிலையில் நிற்கும் விலைமதிப்பற்ற மரத்தினை அப்புறப்படுத்தும் நோக்கில் அவசரம் கருதி மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.1484/2023/**அ**2.

மன்றத்தீர்மான எண்.652 அனுமதிக்கப்பட்டது.

.